முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1452

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.09.2023,** புதன்கிழமை

1. பரம ஆனந்த ஞான குருவே
பரபிரம்மமே சூட்சும குருராஜனே
வரம்பல பெற்று வையகம் மீட்க
வள்ளலாக வாழுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே எந்தன் அவதாரமே
அற்புதம் படைக்க வந்த ஞான குருவே
வரம் தந்து சுப்ரமணியர் யானும் இனிதே
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசிதனை உமக்கு
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 03 ம் நாள், 20.09.2023, புதன்கிழமை)
3. உந்தனுக்கு சக்தி பெருகவே உயர்வாக ஞானபலம் கூட்டி
உன்னோடு ஆறுமுகன் யானே இருக்கின்றேன்
தயவாக நீ செய்யும் தர்மங்கள் செயல்கள் அத்தனையும்
தணிகாசலன் முழுமைபட ஆசி தந்து துணைபுரிகின்றேன்
4. ஆகவே அரங்கன் சொல் செயல் அத்தனையும்
ஆறுமுகன் என் செயலாகுமப்பா
வரமென அரங்கன் துணை கூட்டி
வையகத்தில் தொடர் தொண்டாற்றி
5. இணையில்லா அரங்கன் தர்மத்தைக் காக்கும்
எல்லா தொண்டர்களுமே என்னாசி பெற்றவர்கள்தான்
அவர்கட்கெல்லாம் ஆறுமுகன் யான்
அளவிலா ஆற்றல் கூட்டி
6. வரமென இந்த கலியுகத்தை மீட்கும்
வல்லமையான சக்தி அரங்கன் கரம்பட தந்து அருள் புரிகின்றேன்
ஆகவே உலகோர் அரங்கன் தொடர்வழி ஏற்று
அற்புதம்பட சேவையாற்றி வந்தால்

7. ஜெகமே பெருமாற்றம் காணும்
சித்திமிகு ஞான யுகமாக
ஞானிகள் ஞானவான்கள் கூடிய ஞான ஆட்சிக்காலமாக
ஞானபண்டிதன் என் தலைமைகொண்ட ஞானஆட்சியுமாக மாற்றம் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

**–சுபம்–**